# 64

# இயேசு கைதுசெய்யப்படுதல்

## (26:47-56)

ஒலிவமலையின்மீது இயேசுவும் பதினோரு அப்போஸ்தலர்களும் ஒன்றுகூடியிருக்கையில், காட்டிக்கொடுத்தவரான யூதாஸ் இயேசுவைக் கைதுசெய்யும்படி வந்த கும்பலை வழிநடத்தினார்.

## யூதாஸின் காட்டிக்கொடுக்கும் முத்தம் *(26:47-50)*

**47அவர் இப்படிப் பேசுகையில், பன்னிருவரில் ஒருவனாகிய யூதாஸ் வந்தான், அவனோடேகூடப் பிரதான ஆசாரியரும் ஜனத்தின் மூப்பரும் அனுப்பின திரளான ஜனங்கள் பட்டயங்களையும் தடிகளையும் பிடித்துக்கொண்டு வந்தார்கள்.**

**48அவரைக் காட்டிக்கொடுக்கிறவன்: நான் எவனை முத்தஞ்செய்வேனோ அவன்தான், அவனைப் பிடித்துக்கொள்ளுங்கள் என்று அவர்களுக்கு அடையாளம் சொல்லியிருந்தான்.**

**49உடனே, அவன் இயேசுவினிடத்தில் வந்து: ரபீ, வாழ்க என்று சொல்லி, அவரை முத்தஞ்செய்தான்.**

**50இயேசு அவனை நோக்கி: சிநேகிதனே, என்னத்திற்காக வந்திருக்கிறாய் என்றார். அப்பொழுது, அவர்கள் கிட்டவந்து, இயேசுவின்மேல் கைபோட்டு, அவரைப் பிடித்தார்கள்.**

**வசனம் 47.** பந்தங்களோடு தீவட்டிகளோடும் அணுகிக்கொண்டிருந்த கும்பலின் காட்சியினால் (யோவான் 18:3), 46ம் வசனத்தில் இயேசுவின் கட்டளையின் திடீர்த்தொனி தூண்டப்பட்டிருக்கலாம்.[1] மத்தேயு, அவர் **இப்படிப் பேசுகையில், பன்னிருவரில் ஒருவனாகிய யூதாஸ்** தமது சகாக்களோடு கெத்செமனேக்குள் நுழைந்தார் என்று அறிவித்தார். முன்னேறிக்கொண்டிருந்த அந்தக் கும்பலை இயேசு காணாது இருந்தால், அவர் தமது சீஷர்களுக்கு இன்னும் நிறையக்கூறியிருப்பார் என்பதே இங்கு மறைமுகமான கருத்தாக உள்ளது.

யூதாஸின் வருகை, 26:21ல் இயேசுவின் தீர்க்கதரிசனத்தினுடைய நிறைவேற்றமாக இருந்தது: "உங்களிலொருவன் என்னைக் காட்டிக்கொடுப்பான் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்." இந்த சூழ்ச்சியான செயலைச் செய்வதற்கு யூதாஸ் தம்மை ஒப்புக்கொடுத்திருப்பார் என்று அவர் (இயேசு) மிகவும் குறிப்பாகச் சுட்டிக்காண்பித்திருந்தார் (26:25). மத்தேயு சுவிசேஷமும் மற்ற ஒப்பீட்டு சுவிசேஷங்களும், யூதாஸ் **பன்னிருவரில் ஒருவராக இருந்தார்** என்று வலியுறுத்துவதன் மூலம், அவரது காட்டிக்கொடுத்தலின்

*உச்சகட்டத்தைச் சுட்டிக்காண்பிக்கின்றன (காண்க மாற்கு 14:43; லூக்கா 22:47).*

யூதாஸுடன் **பிரதான ஆசாரியரும் ஜனத்தின் மூப்பரும் அனுப்பின திரளான ஜனங்கள் பட்டயங்களையும் தடிகளையும் பிடித்துக்கொண்டு வந்தார்கள்.** இந்தக் கூட்டத்தில் ரோமானிய படைக் கும்பல் ஒன்றும் இருந்தது (யோவான் 18:3, 12), அத்துடன் யூதர்களின் தேவாலயப் பாதுகாப்புப் படையின் பிரிவு ஒன்றும் இருந்தது (லூக்கா 22:52). முழுபலத்தில் ரோமானியப் படைக்கும்பல் ஒன்று (cohort) சுமார் 600 பேர்களைக் கொண்டிருந்தது, மற்றும் பத்து cohort கள் இணைந்து, 6,000 கொண்டு லேகியோன் என்ற குழுவை ஏற்படுத்தின. தேவாலயக் காவல் வீரர்கள் இயேசுவைக் கைது செய்யச் சென்ற தங்கள் முதல் முயற்சியில் தோல்வியடைந்து வெறுங்கையுடன் திரும்பி வந்ததால், அவர்களுடன் ரோமானிய cohort அனுப்பப்பட்டிருக்கலாம் (யோவான் 7:32, 44-46). இயேசு உயிருடன் பிடிக்கப்பட்டு பின்பு மரணத்திற்கு உட்படுத்தப்படுவதை நிச்சயப்படுத்துவதற்காகவும் ரோமர்கள் அங்கு இருந்திருக்கலாம்.

**வசனங்கள் 48, 49. யூதாஸ்** மற்றவர்களுக்கு முன்னால் வந்ததாகக் காணப்படுகிறார். யோவான் செய்தது போன்று (யோவான் 18:4-9), இயேசுவைப் பிடிக்க வந்தவர்களிடத்தில் இயேசு தம்மையே ஒப்புக்கொடுத்தது பற்றி மத்தேயு பதிவு செய்யவில்லை. கும்பல் தம்மிடம் வருவதற்காகக் காத்திருத்தலுக்கு மாறாக, கர்த்தர் தாமே அவர்களிடம் சென்று, "யாரைத் தேடுகிறீர்கள்?" என்று விசாரித்தார் (யோவான் 18:4). அவர்கள், "நசரேயனாகிய இயேசுவைத் தேடுகிறோம்" என்று பதில் அளித்தபோது, அவர் "நான்தான்" என்று கூறினார். ஒருவேளை அவரது தைரியத்தினால் திகைப்படைந்த அந்தக் கும்பல் பின்னிட்டுத் தரையில் விழுந்தது (யோவான் 18:5, 6). மீண்டும் ஒருமுறை இயேசு, "யாரைத் தேடுகிறீர்கள்?" என்று கேட்டார்; அவர்கள் திரும்பவும் "நசரேயனாகிய இயேசுவைத் தேடுகிறோம்" என்று பதில் அளித்தபோது, அவர் "நான்தானென்று உங்களுக்குச் சொன்னேனே; என்னைத் தேடுகிறதுண்டானால், இவர்களைப் போகவிடுங்கள்" என்று பதில் அளித்தார் (யோவான் 18:7, 8).

இயேசு தம்மைத்தாமே அவர்களிடம் கையளித்ததன் மூலம் தமது அப்போஸ்தலர்களைப் பாதுகாத்தது மட்டுமின்றி, தம்மை யூதாஸ் காட்டிக்கொடுத்தலை அவசியமற்றதாக்கினார். இருப்பினும் யூதாஸ், தாம் செய்வதற்குத் திட்டமிட்டு இருந்ததைச் செய்யத் தீர்மானமாயிருந்தார். தொடக்க உரையாடலுக்குப் பின்னர் **யூதாஸ்** இயேசுவினிடத்தில் வந்து அவரை **முத்தம் செய்தார்,** இது போர்வீரர்களுடன் அவர் செய்துகொண்டிருந்த ஏற்பாட்டின்படியான அடையாளமாக இருந்தது. இயேசு குறிப்பாக இரவு நேரத்தில் தமது அப்போஸ்தலர்களைக் காட்டிலும் அதிகம் வேறுபட்டவராகக் காணப்பட்டிருக்க மாட்டார். ஆகையால், **யாரைப் பிடிக்க வேண்டும்** என்பதைச் சுட்டிக்காண்பிக்கத் தெளிவாக சைகையொன்றே தீர்மானமானதாக இருக்க வேண்டியதாயிற்று.

அவரிடத்தில் இயேசு, "யூதாசே முத்தத்தினாலேயா மனுஷகுமாரனைக் காட்டிக்கொடுக்கிறாய்?" என்று கேட்டார் (லூக்கா 22:48). முத்தத்தை யூதாஸ் பயன்படுத்தியது, அவரது காட்டிக்கொடுத்தலை

*வலுப்படுத்திற்று (காண்க 2 சாமுவேல் 20:9, 10). முத்தம் என்பது நட்புறவை அடையாளப்படுத்திய வாழ்த்தாக இருந்தது. தொடக்ககாலக் கிறிஸ்தவர்களின் மத்தியில் அதன் பயன்பாட்டிலிருந்து, அது பிரியத்தின் செய்கையாக இருந்தது என்பது தெளிவாகிறது (ரோமர் 16:16; 1 கொரிந்தியர் 16:20; 2 கொரிந்தியர் 13:12; 1 தெசலோனிக்கேயர் 5:26; 1 பேதுரு 5:14).* **முத்தம்** *என்பதற்கான கிரேக்க வினைச்சொல், 48ம் வசனத்தில் phileō என்பதில் இருந்து 49ம் வசனத்தில் kataphileō என்பதற்கு மாறுகிறது. இந்தப் பிந்திய சொற்றொடர் "பிரியத்தின் விரிவான காட்சியைக் கருத்தாகத் தெரிவிக்கிறது."[2] (காண்க லூக்கா 7:38, 45; 15:20; நடபடிகள் 20:37.) யூதாஸின் காட்டிக்கொடுத்தலுடைய வலுவானது, அவர் இயேசுவை "என் கர்த்தாவே/எஜமானரே" என்று அர்த்தப்படும் வகையில்* **ரபீ** *என்று அழைத்ததிலும் மிகுதியாக்கப்பட்டது.*

**வசனம் 50.** *இயேசு யூதாஸை* **சிநேகிதனே** *என்று அழைத்ததை உள்ளடக்கிய ஒரே எழுத்தாளர் மத்தேயுதாம். "சிநேகிதனே" என்பதற்கு இங்குள்ள வார்த்தை மிகவும் நெருக்கத்தைக் குறிப்பிடும் philos வார்த்தையல்ல, ஆனால் "தோழன்" அல்லது "உடன் இருப்பவன்" என்று இன்னும் சிறப்பாக மொழிபெயர்க்கப்பட்டிருக்கக் கூடிய hetairos வார்த்தையே ஆகும். இந்தச் சொற்றொடர் முரண்பாடான வகையில் கடிந்துகொள்ளுதலுக்குப் பயன்படுத்தப்பட முடியும், இவ்விடத்தில் அவ்வாறே இது பயன்படுத்தப் பட்டிருக்கலாம் (காண்க 20:13ன் மீதான விளக்கங்கள்).*

*இயேசு யூதாஸிடம்* **என்னத்திற்காக வந்திருக்கிறாய்** *என்று கூறியதாகக் குறிப்பிடும் ஒரே எழுத்தாளரும் மத்தேயுதாம். நமக்கு இந்தக்கூற்றானது கிரேக்க மொழியில் தெளிவற்றதாக உள்ளது மற்றும் இது ஒரு கேள்வியாக மொழிபெயர்க்கப்பட முடியும். உதாரணமாக, NKJV வேதாகமத்தில் "நீ எதற்காக வந்தாய்?" என்றுள்ளது. இருப்பினும் சூழ்நிலையைப் பற்றிய இயேசுவின் அறிவு மற்றும் அதைக் கட்டுப்படுத்துதல் ஆகியவற்றின் வெளிச்சத்தில், இந்தக் கிரேக்க வசனம் ஒரு கூற்றாகவே புரிந்து கொள்ளப்பட்ட வேண்டியதாக இருக்கலாம். யூதாஸ் ஏன் அங்கு வந்திருந்தார் என்று கேட்பதற்குப் பதிலாக, (இயேசுவை) காட்டிக்கொடுக்கவும் அவரைக் கைது செய்யவும் வேண்டியவற்றைச் செய்ய நகரும்படி அவருக்கு இயேசு அறிவுறுத்தினார்.[3]*

## பேதுருவினுடைய உக்கிரத்தின் பட்டயம் *(26:51-54)*

***51அப்பொழுது இயேசுவோடிருந்தவர்களில் ஒருவன் கைநீட்டித் தன் பட்டயத்தை உருவி, பிரதான ஆசாரியனுடைய வேலைக்காரனைக் காதற வெட்டினான்.***

***52அப்பொழுது, இயேசு அவனை நோக்கி: உன் பட்டயத்தைத் திரும்ப அதின் உறையிலே போடு; பட்டயத்தை எடுக்கிற யாவரும் பட்டயத்தால் மடிந்து போவார்கள்.***

***53நான் இப்பொழுது என் பிதாவை வேண்டிக்கொண்டால், அவர் பன்னிரண்டு லேகியோனுக்கு அதிகமான தூதரை என்னிடத்தில் அனுப்பமாட்டாரென்று நினைக்கிறாயா?***

[54]***அப்படிச் செய்வேனானால், இவ்விதமாய்ச் சம்பவிக்கவேண்டும் என்கிற வேதவாக்கியங்கள் எப்படி நிறைவேறும் என்றார்.***

***வசனம் 51*** *மேல்வீட்டில் இயேசு தமது சீஷர்களிடத்தில், "பட்டயம் இல்லாதவன் தன் வஸ்திரத்தை விற்று ஒன்றைக் கொள்ளக்கடவன்" என்று கூறியிருந்தார் (லூக்கா 22:36). அவர்கள் மேல்வீட்டை விட்டுப் புறப்படுவதற்கு முன்னர், "அதற்கு அவர்கள்: ஆண்டவரே, இதோ, இங்கே இரண்டு பட்டயம் இருக்கிறது என்றார்கள். அவர்: போதும் என்றார்" (லூக்கா 22:38).[4] இப்போது லூக்கா 22:49 ன்படி சீஷர்களில் சிலர், இயேசு அவர்களை "பட்டயத்தினால் வெட்ட" விரும்பினாரா என்று கேட்டனர்.*

*தூண்டப்பட்ட பேதுரு இந்தக் கேள்விக்குக் கர்த்தரிடத்தில் இருந்து பதில் வரும்வரை காத்திருக்கவில்லை (யோவான் 18:10). அவர் தாம் வைத்திருந்த* ***பட்டயத்தை*** *விரைவாக* ***உருவி, பிரதான ஆசாரியனுடைய வேலைக்கரனைக் காதற வெட்டினார்*** *(மல்கூஸ்; யோவான் 18:10). அவர்கள் பட்டயம் கொண்டிருக்க வேண்டிய வேளை வந்தது என்று இயேசு குறிப்பிட்டு இருந்ததால், அதை அவர்கள் பயன்படுத்த வேண்டும் என்றே இயேசு நோக்கங் கொண்டிருந்தார் என்று பேதுரு நினைத்திருக்கலாம். பின்னால் பேதுரு தவறியிருந்தாலும், இயேசுவுக்காகத் தாம் மரித்தல் பற்றி அவர் அப்போதுதான் கூறியிருந்ததை (26:35) அர்த்தப்படுத்தினார் என்பதை அவரது செயல்கள் நிரூபித்தன. பயிற்சி பெற்ற ரோமப்படைவீரர்கள் அல்லது தேவாலயக் காவல் வீரர்களுக்கு எதிராக ஒன்றிரண்டு பட்டயங்கள் என்ன செய்துவிடும்? ஆண்டவருக்காகப் பேதுரு உண்மையிலேயே மரிக்க மனவிருப்பமாயிருந்தார்.*

*பட்டயத்தை வீசிய பேதுரு, [மல்கூஸின்]* ***காதற வெட்டினார்.*** *மல்கூஸ் தப்பித்துக்கொள்ள முயற்சி மேற்கொள்ளாதிருந்தால் இது அவனது கதையை முடிக்கும் வீச்சாக இருந்திருக்கும்; பேதுரு அனேகமாக அவனது தலையைக் குறிவைத்திருக்கலாம். இயேசு மல்கூஸின் துண்டிக்கப்பட்ட காதை மீண்டும் இணைத்தபோது அங்கிருந்த ஒவ்வொருவரையும் - விசேஷமாகத் தம்மைப் பிடிக்க வந்தவர்கள் அனைவரையும் - திகைப்பும் வியப்பும் அடையச் செய்திருக்க வேண்டும் (லூக்கா 22:51). அவர் இந்த அற்புதத்தின் மூலமாக அப்போஸ்தலர்களின் உயிரைக் காத்திருக்கலாம்.*

***வசனம் 52. இயேசுவினிடத்தில்*** *இருந்து படைகளை அழைக்கும் அழைப்பிற்குப் பதிலாக, கர்த்தருடைய கடிந்துகொள்ளுதலைக் கேட்ட பேதுரு அதிர்ச்சி அடைந்திருக்க வேண்டும்:* ***உன் பட்டயத்தைத் திரும்ப அதின் உறையிலே போடு.*** *இயேசு தாம் கைதுசெய்யப்படுதல் மற்றும் தமது மரணம் ஆகியவற்றைப் பற்றித் திரும்பத் திரும்ப முன்னுரைத்திருந்தார், எனவே அதைத் தடுப்பதற்குப் பேதுரு செய்த முயற்சி வீணாயிற்று. அத்துடன் கூடுதலாக, கிறிஸ்துவின் இராஜ்யம் ஆவிக்குரிய இயல்பைக் கொண்டிருந்தபடியால், அவரைப் பின்பற்றுபவர்கள் போரிட வேண்டிய அவசியம் இல்லாதிருந்தது (யோவான் 18:38).*

*பேதுருவினிடத்தில் இயேசு,* ***பட்டயத்தை எடுக்கிற யாவரும் பட்டயத்தால் மடிந்து போவார்கள்*** *என்று கூறினார்.* Robert H. Mounce *அவர்கள், "இது ஒரு பழமொழியாகத் தோன்றுகிறது (இவ்வசனம் ஆதியாகமம் 9:6 மற்றும் வெளிப்படுத்தின விசேஷம் 13:10), ஆகையால்*

சந்தர்ப்பப் பொருளைக் கொண்டு இது கவனமாக விளக்கப்படுத்தப்பட வேண்டும். இது எந்தக்காரணத்திற்காகவும் எந்த வேளையிலும் தற்காப்பு நடவடிக்கையைத் தவிர்க்கும் பொதுவான விதியாக இருப்பதில்லை" என்று விளக்கம் அளித்தார்.[5] இயேசுவின் கூற்று ஒரு பழமொழியைக் காட்டிலும் அதிகமானதாக இருந்தது என்று மற்றவர்கள் நினைத்திருக்கலாம். இது "இதோ, நெருப்பைக் கிளறுகிறவர்களே, பட்டயத்தை எடுக்கிறவர்களே: நீங்கள் கிளறிய நெருப்பிலேயே சென்று விழுங்கள், எடுத்த பட்டயத்தாலேயே விழுங்கள். என்னுடைய வார்த்தையிலிருந்து ... நீங்கள் இதைக் கொண்டிருக்கிறீர்கள்; நீங்கள் உங்கள் அழிவிற்குத் திரும்புவீர்கள்" என்று கூறும் ஏசாயாவின் தார்கமில் இருந்து கடனாகப் பெறப்பட்டது என்று கூறுவதில் மனநிறைவு அடைகின்றனர்.[6] மேலும் அவர்கள், இயேசுவைக் கைது செய்ததில் தேவனுடைய சித்தம் நிறைவேற்றப்பட்டது, அது நடைபெறுவதில் இருந்து அதைத் தடைசெய்ய சீஷர்கள் எதுவும் செய்ய இயலாதிருந்தனர் என்றும் விளக்கப்படுத்தினர்.[7]

***வசனம் 53.*** பின்பு இயேசு, **நான் இப்பொழுது என் பிதாவை வேண்டிக்கொண்டால், அவர் பன்னிரண்டு லேகியோனுக்கு அதிகமான தூதரை என்னிடத்தில் அனுப்பமாட்டாரென்று நினைக்கிறாயா?** என்று கேட்டார். அவர் தாம் கைதுசெய்யப்படுதலைத் தடுக்க விரும்பினால், தாமே தேவனிடத்தில் வேண்டுகோள் விடுத்து தூதர்களின் சேனைகளினுடைய உதவியைக் கோர முடியும் என்பதை, அவரது கேள்வி அவர்களுக்கு நினைவூட்டியது.[8] தேவனுடைய குமாரனுக்கு, தமது பலவீனம் மற்றும் பாதுகாப்பற்ற சீஷர்கள் தமது விரோதிகளை முறியடித்தல் ஆகியவற்றிற்கு உதவி தேவைப்படவில்லை. அவர் "ஒரு அடிமையின் காதை அறுக்குதலைக் காட்டிலும் அதிகம் சிறப்பான எதையும் செய்ய இயலாத ஒரு மனிதரின் அற்ப முயற்சிகளுக்கு" அடைக்கலம் தேட வேண்டிய அவசியம் இருக்கவில்லை.[9]

தூதர்களைச் சீஷர்கள் சுலபமாகப் புரிந்துகொள்ளக் கூடிய வகையில் இயேசு விவரித்தார். ரோமானிய லேகியோன் என்பது சுமார் 6,000 போர்வீரர்களைக் கொண்டதாகும், எனவே பன்னிரெண்டு லேகியோன் என்பது சுமார் 72,000 தூதர்களைக் கொண்டதாகும் - இது வல்லமை நிறைந்தவர்களின் பெருந்திரள் கூட்டமாகும்.[10] இப்படிப்பட்ட சேனை வந்தால், இயேசுவைக் கைது செய்ய வந்த ரோமானிய cohort மற்றும் யூதர்களின் தேவாலயப் போர்ச்சேவர்கள் விரைவாகவும் தீர்மானமாகவும் தோற்கடிக்கப்படுவார்கள்.

இயேசு தமது பிதாவின் சித்தத்தின்படி செய்யத் தீர்மானமாயிருந்தார், மற்றும் அவர் சிலுவையின் மீது மரணத்திற்குக் கீழ்ப்படிதலுடன் தம்மை ஒப்புவித்தார். அவர் தாம் கைது செய்யப்படுதலைத் தடுக்கத் தூதர்களை அழைக்க மாட்டார். தூதர்களின் வருகை நியாயத்தீர்ப்பு நாளுக்கென்று முன்குறிக்கப் பட்டுள்ளது; அவர்கள் கிறிஸ்துவுடன் வந்து, நல்லவர்களைப் பொல்லாதவர்களில் இருந்து பிரித்தெடுப்பார்கள் (13:41; 16:27; 24:31; 25:31).

***வசனம் 54.*** இயேசு ஒரு யுத்தத்தில் போராடியிருந்தால், அவர் மிதமிஞ்சிய சக்தியையும் வல்லமையையும் பயன்படுத்தி இருக்க முடியும் - ஆனால் **வேதவசனங்கள் நிறைவேறியிருக்காது.** பழைய ஏற்பாட்டைப் பற்றிய இயேசுவின் குறிப்பு இயல்பில் பொதுவானதாக உள்ளது, ஏனெனில் அவர் குறிப்பாக எந்த வசனப்பகுதியையும் சுட்டிக்காட்டவில்லை. ஒருவேளை

*அவர் சகரியா 13:7ஐத் தமது சிந்தையில் கொண்டிருக்கலாம்: "மேய்ப்பனை வெட்டுவேன், மந்தையின் ஆடுகள் சிதறடிக்கப்படும்" (26:31). அவர் சிலுவையின் மீது தமது மரணத்தைக் குறிப்பிட்டிருக்கலாம் (காண்க சங்கீதம் 22:16-18; ஏசாயா 53:4-12).*

## கும்பலை இயேசு கடிந்துகொள்ளுதல்
## *(26:55, 56)*

**[55]அந்த வேளையிலே இயேசு ஜனங்களை நோக்கி: கள்ளனைப் பிடிக்கப் புறப்படுகிறதுபோல, நீங்கள் பட்டயங்களையும் தடிகளையும் எடுத்துக்கொண்டு என்னைப் பிடிக்கவந்தீர்கள்; நான் தினந்தோறும் உங்கள் நடுவிலே உட்கார்ந்து தேவாலயத்தில் உபதேசம் பண்ணிக்கொண்டிருந்தேன்; அப்பொழுது, நீங்கள் என்னைப் பிடிக்கவில்லையே.**

**[56]ஆகிலும் தீர்க்கதரிசிகள் எழுதியிருக்கிற வசனங்கள் நிறைவேறும்படி இவைகளெல்லாம் சம்பவிக்கிறது என்றார். அப்பொழுது, சீஷர்களெல்லாரும் அவரைவிட்டு ஓடிப்போனார்கள்.**

***வசனம் 55.*** *இயேசு* ***கும்பலை*** *நோக்கித் தமது கவனத்தைத் திருப்பி, அவர்கள்* ***கள்ளனைப்*** *பிடிக்கப் புறப்படுகிறதுபோல, நீங்கள்* ***பட்டயங்களையும் தடிகளையும்*** *எடுத்துக்கொண்டு என்னைப் பிடிக்கவந்தது ஏன் என்று கேட்டார். "கள்ளன்" (lēistēs) என்பது வழிப்பறிக்காரன் அல்லது "திருடன்" என்பதைக் குறிப்பிடலாம் (21:13; லூக்கா 10:30, 36; யோவான் 10:1, 8; 2 கொரிந்தியர் 11:26). இவ்வகையான திருடன் வன்முறையையும் பலாத்காரத்தையும் பயன்படுத்தத் தயங்குவதில்லை.[11] இயேசு அப்படிப்பட்ட நபராக இருந்திருந்தால், "பட்டயங்கள் மற்றும் தடிகள்" அங்கிருந்தது நியாயப்படுத்தக் கூடியதாக இருக்கலாம். இருப்பினும் அவர் சமாதானத்தின் மனிதராக இருந்தார்.*

*Lēistēs என்ற சொற்றொடர் "கிளர்ச்சியாளர்" அல்லது "புரட்சியாளர்" என்பதையும் குறிப்பிட முடியும். யோசிப்பஸ் அவர்கள் இவ்வார்த்தையை, ரோமாபுரிக்கு எதிராகப் புரட்சி செய்த செலோத்தே என்பவர்களுக்குப் பயன்படுத்தினார். மேசியாத்துவப் பாவனை செய்யும் சிலரைக் கொண்டிருந்த இம்மனிதர்கள், தங்கள் சொந்த மக்களிடத்தில் இருந்து தங்களுக்குத் தேவைப்பட்டவற்றை அடிக்கடி எடுத்துக்கொண்டனர்.[12] இதே வார்த்தை, இயேசுவுக்குப் பதிலாக விடுவிக்கப்பட்ட பரபாஸுக்கும் (யோவான் 18:40) இயேசுவின் இருபுறத்திலும் சிலுவையில் அறையப்பட்ட இரண்டு பேருக்கும் (27:38, 44) பயன்படுத்தப்பட்டுள்ளது. மூன்று மனிதர்கள் புரட்சியாளர்கள் என்று யூகிக்கப்பட்டுள்ளது. ஒருவேளை இயேசு, தாம் இந்தவகைப்பாட்டுக்கு உரியவர் அல்ல என்று தெளிவாக்கினார் எனலாம்; அவரது இராஜ்யம் இவ்வுலகத்திற்கு அடுத்ததல்ல. அவர் ரோமாபுரிக்கு எதிராகக் கலகம் செய்யவில்லை என்பதால், ஆயுதம் தாங்கிய இந்தப் போர்வீரர்களும் ஆசாரியர்களும் அவரைக் கைது செய்ய வந்ததில் அர்த்தம் எதுவும் இருக்கவில்லை.*

*கள்ளத்தனமான திருடன் அல்லது புரட்சியாளர் என்று இருப்பதற்கு மாறாக, இயேசு தமது ஊழியத்தை ஒவ்வொருவரும் முழுமையாகக் காணும்படியாகவே செயல்படுத்தியிருந்தார். அவர்,* ***நான் தினந்தோறும் உங்கள் நடுவிலே உட்கார்ந்து தேவாலயத்தில் உபதேசம்பண்ணிக்கொண்டிருந்தேன்; அப்பொழுது, நீங்கள் என்னைப் பிடிக்கவில்லையே*** *என்று கூறினார். அவர்கள் மக்களுக்குப் பயந்ததால் அவரை அப்போது கைது செய்திருக்கவில்லை (21:46; காண்க 14:5; 21:26). ஒருவேளை இயேசு, தமது எதிராளிகளே கள்வர்கள் போல் செயல்பட்டு, தம்மைப் பிடிப்பதற்குத் தனிமையான இடத்திற்கு இருளின் மறைவில் வந்தனர் என்று மறைமுகமாக உணர்த்தியிருக்கலாம்.*

***வசனம் 56.*** *அவர்களின் வன்முறை, பகுத்தறிவுக்கு ஏற்றதாக இராவிட்டாலும், அது அத்தியாவசியமானது என்று இயேசு அறிந்தார்:* ***தீர்க்கதரிசிகள் எழுதியிருக்கிற வசனங்கள் நிறைவேறும்படி இவைகளெல்லாம் சம்பவிக்கிறது.*** *ஒருவேளை அவர், "அடிக்கப்படும் ஆட்டுக்குட்டியைப் போலக் கொண்டுபோகப்பட்டும்" மற்றும் "அக்கிரமக்காரரில் ஒருவராக எண்ணப்பட்டார்" என்று தீர்க்கதரிசனம் உரைத்திருந்த ஏசாயா 53ம் அதிகாரத்தைத் தமது சிந்தையில் கொண்டிருக்கலாம் (ஏசாயா 53:7, 12).*

*போர்வீரர்கள் இயேசுவைக் கைது செய்தபோது, அவர் முன்னுரைத்திருந்தபடியே* ***சீஷர்களெல்லாரும் அவரைவிட்டு ஓடிப்போனார்கள்*** *(26:31ன் மீதான விளக்கங்களைக் காணவும்). இயேசு தமது எதிரிகளைத் தூக்கியெறியவும் அவர்களின் பிடியில் இருந்து தப்பிக்கொள்ளவும், தமது அற்புத வல்லமையைப் பயன்படுத்தாது இருந்ததால் ஏமாற்றம் அடைந்தனர். சீஷர்கள் திகைப்பும் குழப்பமும் அடைந்தவர்களாக ஓடிப்போயினர்.*

---

*குறிப்புகள்*

[1]*பந்தங்களும் தீவட்டிகளும் வைத்திருந்தனர் என்பதோடு, "பஸ்கா காலத்தின் முழுநிலவு இரவு வேளையில் அவர்களின் நகர்விற்கு உதவியிருக்கும்"* (Jack P. Lewis, *The Gospel According to Matthew*, Part 2, The Living Word Commentary [Austin, Tex.: Sweet Publishing Co., 1976], 150). [2]Robert H. Mounce, *Matthew*, New International Biblical Commentary (Peabody, Mass.: Hendrickson Publishers, 1991), 244. [3]Leon Morris, *The Gospel according to Matthew*, Pillar Commentary (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1992), 674. [4]*இயேசு பேச்சு உருவகத்தைப் பயன்படுத்தி, அழிவின் காலம் நெருங்கிக் கொண்டிருக்கிறது என்று தமது சீஷர்களை எச்சரித்தார் என்று கருத்துத் தெரிவிக்கப் பட்டுள்ளது. இருப்பினும், தேவைப்பட்டால், சுய தற்காப்பிற்காகப் பட்டயங்கள் பயன்படுத்தப்பட வேண்டும் என்று அவர் நோக்கங் கொண்டிருந்ததாகக் காணப்படுகிறது.* [5]Mounce, 245. [6]W. F. Albright and C. S. Mann, *Matthew*, The Anchor Bible (Garden City, N.Y.: Doubleday & Co., 1971), 329. They cited Hans Kosmala, "Das tut zu meinem Gedächtnis," *Novum Testamentum* 4 (April 1960): 81–95. [7]Ibid. [8]*சற்று நேரத்திற்கு முன்புதான், கெத்செமனே தோட்டத்தில் அப்படிப்பட்ட தூதர் ஒருவர் அவரைப் பெலப்படுத்தியிருந்தார் (லூக்கா 22:43).* [9]Morris, 676. [10]*"பன்னிரெண்டு" என்ற எண்ணிக்கை தனிச்சிறப்புடையதாக உள்ளது; ஒவ்வொரு மனிதருக்கும் ஒரு லேகியோன் இருந்திருக்கும் (இயேசுவும் பதினோரு அப்போஸ்தலர்களும்).*

[11]*Kleptēs* என்பதே பொதுவான “கள்வனுக்கு” உரிய வார்த்தையாகும்.

[12]K. H. Rengstorf, *“lēstēs,”* in *Theological Dictionary of the New Testament,* ed. Gerhard Kittel and Gerhard Friedrich, abr. and trans. Geoffrey W. Bromiley (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1985), 532.